செய்தி வெளியீடு எண்:300 நாள்: **30.08.2006**

**<u>சுனாமி மறுசீரமைப்புத் திட்டங்கள்</u>**
**<u>மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையிலான</u>**
**<u>மாநில அளவிலான வழிநடத்தும் குழுவின் முதற்கூட்டம்</u>**

சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான வழிநடத்தும் குழுவின் முதற் கூட்டம் இன்று **(30.08.06)** மாலை **4** மணியளவில் தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வழி நடத்தும் குழுவின் உறுப்பினர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு சுப. தங்கவேலன், மாண்புமிகு சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர். வெள்ளக்கோயில் திரு. எம்.பி. சாமிநாதன், தலைமைச்செயலர் திரு.எல்.கே. திரிபாதி, செயலர்கள் நிதித்துறை, கால்நடைத்துறை மற்றும் மீன் வளத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, விவசாயத்துறை, நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பொதுப்பணித்துறை, ஊரகவளர்ச்சித்துறை, சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை மற்றும் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் வருவாய்த்துறை செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வழிநடத்தும் குழுவின் தலைவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமது உரையில், ‘‘தமிழகத்தில் எதிர்பாராமல் நிகழ்ந்த சுனாமி ஆழிப்பேரலை தாக்குதலால் கடலோர மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான உயிரழப்புகளும், வீடுகள், பயிர் நிலங்கள், மீன்பிடி சாதனங்கள், படகுகள் உள்ளிட்ட ஏராளமான பொருட்சேதங்களும் ஏற்பட்டதோடு, மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டது என்றும், சீர்குலைந்த அம்மக்களின் வாழ்க்கை நிலை பெறவும், வளம் பெறவும், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் மைய அரசு ஆகியவற்றின் உதவியோடு ஏறத்தாழ ரூபாய் **4,897** கோடி செலவில் பல்வேறு நீண்டகால அடிப்படையிலான திட்டங்கள் தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களின் பலன்கள் அனைத்தும் உரிய நேரத்தில் உரிய மக்களைச் சென்றடைய வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், இவ்வரசு பொறுப்பேற்றவுடன், சுனாமி நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திட தொடர்புடைய அரசுத் துறை செயலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் பங்கேற்ற மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த சூன் திங்கள் **24**ஆம் நாளன்று நடத்தப்பட்டு, அக்கூட்ட முடிவிலேயே,

- ♦ தற்போது கட்டப்பட்டுவரும் வீடுகளின் அனைத்து கட்டுமானப் பணிகளும் வரும் மழைக்காலத்திற்குள்ளாக முடிக்கப்பட வேண்டும்.
- ♦ கூடுதலாக 70,000 வீடுகள் கட்டப்பட வேண்டும். வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட தேவையான ஒப்புதல்கள் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் பெறப்பட வேண்டும்.
- ♦ நிவாரணம் மற்றும் மறுவாழ்வு திட்டங்களுக்கும், பாதிக்கப்பட்டோருக்கான வீடுகளின் கட்டுமான பணிகளுக்காகவும் நடப்பு நிதியாண்டில் ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாக செலவினம் செய்யப்பட வேண்டும்

என்பன உள்ளிட்ட பதினோரு முடிவுகள் எடுக்கப்பட்டன” என்று தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில், உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ‘அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் ‘சுனாமி அவசர உதவித் திட்டம்’ ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தவும், திட்டங்கள் குறித்த கொள்கை அளவிலான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், நீண்டகால திட்டங்களுக்கான முடிவுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் துறை சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொண்டு கொள்கை முடிவுகளை அறிவிக்கும் பொருட்டு, இன்றைய தினம் மாற்றியமைக்கப்பட்ட மாநில அளவிலான வழிநடத்தும் குழுவின் முதற் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள கூரை வீடுகள், மண் சுவர்களால் ஆன வீடுகள் போன்ற பாதுகாப்பற்ற வீடுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டித் தரும் பணியைப் பற்றியும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. வருவாய்த் துறையினர் அளித்த விவரங்களின்படி, கடலோர மாவட்டங்களில் இப்பகுதிகளில் பாதிப்பு அடையக்கூடிய பகுதிகளின் வரைபடங்கள், மைய அரசு நிறுவனங்களின் உதவியோடு தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும், முதற்கட்டமாக, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஆறு மாவட்டங்களின் வரைபடங்கள் இம்மாத இறுதிக்குள்ளாகவும், இராமநாதபுரம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு மாவட்டங்களின் வரைபடங்கள் வரும் செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாக முடிவுறும் என்றும், இந்த வரைபடங்களின் அடிப்படையில் குடும்ப வாரியாக கணக்கிடப்பட்டு, வீடு கட்டும் பணி தொடங்கப்படும்.

இப்பணிகளுக்குத் தேவையான நில எடுப்பு செய்வதற்கு போதிய நிதி ஒதுக்கீடும், தேவைப்படும் கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்படும். வீடுகளின் கட்டுமானப் பணிகளை எந்தெந்த வழிகளில் துரிதப்படுத்தினால் மிக விரைவாகவும், சரியாகவும் கட்ட இயலும் என்பதைப் பற்றி துறை செயலாளர்களும், அமைச்சர்களும் ஆலோசனை வழங்கினார்கள். இதற்கான உரிய ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும், இத்திட்டமானது பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்தப்படும்.

கடந்த 24.06.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு பின்னர் ஏனைய இனங்களில் கீழ்க்கண்டவாறு முன்னேற்றம் உள்ளது.

- தனியாரிடமிருந்து கூடுதலாக 54 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.
- பயனாளிகளுக்கு கூடுதலாக 3122 வீடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- நகர்ப்புற மற்றும் ஊரமைப்புத் துறை 205 குடியிருப்புகளில் 192 குடியிருப்புகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- சுற்றுச்சூழல் துறை 103 இனங்களில் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் தொடங்கப்படாத 1020 வீடுகளுக்கான நிதி உதவியை வழங்குவதற்கு மைய அரசின் பி.எஸ்.என்.எல் நிறுவனம் முன் வந்துள்ளது.
- அரசு ஆணை எண் 532 வருவாய் இ.இ.III(2) துறை நாள் 14.08.2006–ன்படி, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதலாக வலைகள், ஐஸ் பெட்டிகள், உயிர் பாதுகாப்பு கவச உடைகள், விளக்குகள் போன்றவற்றை வழங்குவதற்காக ரூ.110.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் சலுகையானது 2006–07–ம் ஆண்டுக்கும் நீட்டிக்கப்பட்டு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- மாண்புமிகு முதல்வரின் ஆய்வுக்குப் பின்னர் 31.07.2006 வரை 31.26 கோடி ரூபாய் தொடர்புடைய துறைகளால் செலவிடப்பட்டுள்ளது.

வெளியீடு  இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9